வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி-13.10.2025 நேரம் மாலை 6.10 மணி

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/13.10.2025/

------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

டிஜிட்டல் புதுமைகளும், இளம் பணியாளர் சக்தியும் இணைந்து உலக வளர்ச்சியின் உந்து சக்தியாக இந்தியாவை மேம்படுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

புதுச்சேரியில், இந்திராகாந்தி சிலைக்கும் ராஜீவ்காந்தி சிலைக்கும் இடையே, 436 கோடி ரூபாய் மதிப்பில் மேம்பாலம் கட்டும் பணிகளுக்கு இன்று மத்திய அமைச்சர் திரு நிதின் கட்கரி அடிக்கல் நாட்டினார்.

பீகாரில் இரண்டாம் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான, தேர்தல் அறிவிக்கை இன்று வெளியிடப்பட்டு வேட்புமனு தாக்கல் தொடங்கி உள்ளது.

தீபாவளிக்கு பட்டாசு வெடிப்பதால் குழந்தைகளுக்கு கண் பாதிப்பு ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் புதுச்சேரியில் அனைத்து பட்டாசு கடைகளிலும், இலவச பாதுகாப்பு கண்ணாடி வழங்கப்பட உள்ளது.

மோடி-கட்டுரை

இந்தியாவின் டிஜிட்டல் புதுமைகளும், இளம் பணியாளர் சக்தியும் இணைந்து உலக வளர்ச்சியின் உந்து சக்தியாக இந்தியாவை மேம்படுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இதுகுறித்து மத்திய

பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி எழுதியுள்ள கட்டுரை ஒன்றை, பிரதமர் சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். வளர்ந்த நாடுகள் தங்களின் சொந்த நலனுக்கு மட்டுமே முக்கியத் துவம் அளித்து வரும் நிலையில் இந்தியா சுயசார்புக்கு அப்பாற்பட்டு, உலக நோக்குடன் வேறுபட்ட பாதையில், பயணித்து வருவது குறித்து இக்கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளது.

*புதுச்சேரி-கட்கரி-1 (17)*

மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி இன்று புதுச்சேரியில், இந்திராகாந்தி சிலைக்கும் ராஜீவ்காந்தி சிலைக்கும் இடையே, 436 கோடி ரூபாய் மதிப்பில் 3.88 கிமீ மேம்பாலம் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். 32-ஆம் எண் தேசிய நெடுஞ்சாலையில், ஆயிரத்து 588 கோடி ரூபாய் செலவில், புதுச்சேரி – பூண்டியாங்குப்பம் இடையே 38 கிமீ நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள 4 வழிச் சாலையை அவர் நாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார். கிழக்கு கடற்கரை சாலையில் 13.63 கிமீ சாலைப் பகுதியில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளும் பணிகளுக்கும் மத்திய அமைச்சர் திரு நிதின் கட்கரி அடிக்கல் நாட்டினார். நிகழ்ச்சியில் திரு கட்கரி பேசுகையில் மாற்று எரிபொருள் மற்றும் உயிரி எரிபொருள் துறையில் உலகின் முன்னணி நாடாக இந்தியா மேம்பட்டு வருவதாக கூறினார். இந்தியாவில் கடந்த 2014-ஆம் ஆண்டு 14 லட்சம் கோடி ரூபாயாக இருந்த மோட்டார் வாகனத் துறையின் மதிப்பு தற்போது 22 லட்சம் கோடி

ரூபாயாக அதிகரித்து இருப்பதாகவும், குறிப்பாக மின்சார டிராக்டர்களின் பயன்பாட்டினால், விவசாயிகளுக்கு, ஆண்டுக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் மிச்சமாகும் என்றும் அவர் தெரிவித்தார். சாலை கட்டமைப்பின் மேம்பாடு, மற்றும், திறம்பட்ட எரிபொருளின் பயன்பாட்டினால், நாட்டில் சரக்கு போக்குவரத்து செலவு, 16-ல் இருந்து 10 சதவிகிதமாக குறைந்து இருப்பதாகவும், வரும் டிசம்பர் மாதத்திற்குள் இது 9 சதவிகிதமாக குறையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார். நாட்டில் இதுவரை 18 லட்சம் டன் நகர்புற கழிவுகள், சாலை கட்டுமானப் பணிகளுக்கு பயன்படுத்தப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். புதுச்சேரி துணை நிலை ஆளுநர் மற்றும் முதலமைச்சரின் கோரிக்கையை ஏற்று புதுச்சேரிக்கு புதிதாக 2 நெடுஞ்சாலைத் திட்டங்களையும், மத்திய அமைச்சர் அறிவித்தார்……………..

(வாய்ஸ்- கட்கரி)

மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் இவ்விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் நாட்டில் 4 வழி, 8 வழி மற்றும் 12 வழிச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதால், வடமாநிலங்களும், தென் மாநிலங்களும் இணைக்கப்பட்டுள்ளதாக கூறினார். ……….

(வாய்ஸ்-முருகன்)

நெடுஞ்சாலைத் திட்டங்களின் தொடக்க விழாவில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் பேசுகையில் மேம்பாலங்களைக் கட்டுவது, வளர்ச்சிக்கான பாதையே தவிர வெறும் கட்டுமானப் பணி அல்ல என்றார். பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியபடி, புதுச்சேரி தற்போது பெஸ்ட் புதுச்சேரியாக மேம்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு ரங்கசாமி இவ்விழாவில் பேசுகையில் கூறினார். புதிய மேம்பாலம் அமைக்கப்படுவதால் புதுச்சேரியில் போக்குவரத்து நெரிசலும் விபத்துகளும் குறையும் என்றும் அவர் கூறினார். புதுச்சேரி சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், மாநில அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றும், மூத்த அதிகாரிகள் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

*பீகார்*

பீகாரில் மொத்தம் 243 தொகுதிகளில் 122 தொகுதிகளுக்கு நவம்பர் 11-ஆம் தேதி நடைபெற உள்ள இரண்டாம் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான, தேர்தல் அறிவிக்கை இன்று வெளியிடப்பட்டு வேட்புமனுதாக்கல் தொடங்கி உள்ளது. வரும் 20-ஆம் தேதி வரை வேட்புமனுக்களை தாக்கல் செய்யலாம் என்றும், மறு நாள் 21-ஆம் தேதி வேட்பு மனு பரிசீலனை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே பீகாரில் 121 தொகுதிகளுக்கு நவம்பர் 6-ஆம் தேதி நடைபெற உள்ள முதல் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் ஏற்கனவே தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்த 2

கட்டங்களிலும் பதிவாகும் வாக்குகள், நவம்பர் 14-ஆம் தேதி எண்ணப்படும்.

*ஜிஎஸ்டி- பஞ்சாப்*

பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த மாதம் 22 ஆம் தேதி அறிவித்த ஜிஎஸ்டி சேமிப்பு திருவிழாவால் நாடு முழுவதும், அனைத்து பிரிவு மக்களும் பயன் பெற்று வருகின்றனர். அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால் பஞ்சாபில் பொருளாதாரம் எப்படி எல்லாம் ஊக்கம் பெறும் என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு........

(வாய்ஸ்)

*ஜிஎஸ்டி-பஞ்சாப்* (வாய்ஸ்)

புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், பஞ்சாபில், கைவினைக் கலைஞர்கள், விவசாயிகள் மற்றும் சிறு வணிகர்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக அமைந்துள்ளன. திருத்தப்பட்ட விதிமுறைகளின் கீழ், பஞ்சாபில் பிராந்திய அளவில் புகழ்பெற்ற பாரம்பரியப் பொருட்கள் உட்பட பல்வேறு பொருட்களின் விலை குறைவதால் இத்தகைய பொருட்களின் உற்பத்தி அதிகரித்து பொருளாதாரம் ஊக்கம் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பூ வேலைப்பாடுகளுடன் கூடிய ஃபூல்காரி துணி வகைகள் மீதான 12 சதவிகித ஜிஎஸ்டி, 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதால், இத்துறை சார்ந்த 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைவினைக் கலைஞர்கள் புதிய ஊக்கம் பெற்றுள்ளனர். அம்ரித்சர் மற்றும் லூதியானா பகுதியில் தயாராகும் பாரம்பரிய கம்பளி சால்வைகள் மீதான

வரியும், 12-ல் இருந்து, 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதால் இத்துறை சார்ந்த சிறு நிறுவனங்களின் வர்த்தகம் பெருகவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், பண்டிகை காலத்திற்கு பின்னரும், பல்வேறு துறையில் உற்பத்தி மற்றும் வர்த்தகம் தொடர்ந்து அதிகரித்து மக்களின் வாழ்வாதாரம் வலுப்பெறும் என்பதில் ஐயமில்லை.

குலோத்துங்கன்

தீபாவளி பண்டிகையின் போது பட்டாசு வெடிப்பதால் புதுச்சேரியில் ஆண்டுதோறும், நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு கண்பார்வை பாதிப்பு ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் இவ்வாண்டு புது முயற்சியாக. அனைத்து பட்டாசுக் கடைகளிலும், பட்டாசு வாங்கும் குழந்தைகளுக்கு இலவச பாதுகாப்பு கண்ணாடி வழங்கப்பட உள்ளது. அரவிந்த கண் மருத்துவமனை மற்றும் கெரா லிங்க் இன்டர்நேஷனல் நிறுவனத்தினர் இணைந்து இதற்கென 20 ஆயிரம் பாதுகாப்பு கண்ணாடிகளை வழங்குகின்றன. இன்று, அரவிந்த் கண் மருத்துவமனையின் முதன்மை மருத்துவ அதிகாரி டாக்டர் வெங்கடேஷ் உள்ளிட்டோர், உழவர்கரை வட்டாட்சியர் திரு செந்தில்குமார் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கனை நேரில் சந்தித்து, உழவர்கரை தாலுக்கா பகுதியில் விநியோகிப்பதற்கான, இத்தகைய 5 ஆயிரம் பாதுகாப்பு கண்ணாடிகளை வழங்கினர். பின்னர் மாவட்ட ஆட்சியர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அனைத்து பகுதிகளிலும் பாதுகாப்பு கண்ணாடிகள் இலவசமாக

வழங்கப்படும் என்றும் தற்காலிக அனுமதியுடன் செயல்படும் 110 பட்டாசு கடைகளில் இக்கண்ணாடிகள் கிடைக்கும் என்றும் கூறினார்.

வானிலை

வங்க கடல் மற்றும் அரபிக் கடலில் நிலவும் கீழடுக்கு சுழற்சிகள் காரணமாக, இன்று தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவை-திருப்பூர் மாவட்ட மலைப்பகுதிகள், மற்றும் நீலகிரி, சேலம், ஈரோடு, தேனி, திண்டுக்கல், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 19-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக ராணிப்பேட்டை மாவட்டம் பாலாறு அணைக்கட்டு உள்ளிட்ட இடங்களில் தலா 8 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

கிரிக்கெட்-டெஸ்ட்

இண்டியா-வெஸ்ட் இண்டிஸ் அணிகளுக்கு இடையே டெல்லியில் நடைபெறும் 2-ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 4-ஆம் நாளான இன்று, ஆட்ட நேர இறுதி வரை, இந்திய அணி, தமது 2-ஆவது இன்னிங்சில், 1 விக்கெட் இழப்பிற்கு, 63- ரன் எடுத்து, வெற்றிக்கு இன்னும் 58- ரன் தேவை என்ற நிலையில் உள்ளது.

*மகளிர் கிரிக்கெட்*

உலக கோப்பைக்கான ஐசிசி மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில், பங்களாதேஷ்- தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையே, இன்று விசாகப்பட்டிணத்தில் நடைபெறும் போட்டியில், டாஸ் ஜெயித்து முதலில் ஆடும் பங்களாதேஷ் அணி, சற்று முன் வரை, ---------- ஓவர்களில், --------- விக்கெட் இழப்பிற்கு, ------- ரன் எடுத்து இருந்தது..

*செயற்கை நுண்ணறிவு*

**செயற்கை நுண்ணறிவு துறையில் இந்தியாவின் தாக்கங்கள்** என்பது குறித்து அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற உள்ள உச்சி மாநாட்டிற்கான ஏற்பாடுகளின் ஒரு பகுதியாக, மத்திய அரசு, உலகத் தாக்கம் பற்றிய 3 போட்டிகளுக்கு விண்ணப்பங்களை வரவேற்றுள்ளது. மொத்தம் 85 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையுடன் கூடிய இப்போட்டிகளுக்கு இம்மாதம் 31-ஆம் தேதி வரை, இணையதளம் மூலமாக விண்ணப்பிக்கலாம். செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தை, அனைவருக்கும் பயன் உள்ள வகையில், பொறுப்பான விதத்தில் எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்பதை ஊக்குவிக்கும் வையில் இப்போட்டிகள் வடிவமைக்கப் பட்டுள்ளன.

*மோடி-க□டா*

கனடா வெளியுறவு அமைச்சர் திருமதி அனிதா ஆனந்த், இன்று புதுடெல்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினார். திருமதி அனிதாவின் வருகையினால், இந்தியா-கனடா இருதரப்பு

கூட்டாண்மை உறவுகளை வலுப்படுத்துவதற்கான நடப்பு முயற்சிகள் ஊக்கம் பெறும் என்று பிரதமர் கூறினார். இவ்வாண்டு ஜூன் மாதம் ஜி-7 உச்சி மாநாட்டின் போது கனடாவில், அந்நாட்டு பிரதமர் திரு மார்க் கார்னீ-யை தாம் சந்தித்துப் பேசியதை பிரதமர் திரு நரேந்திர மோடி நினைவு கூர்ந்தார். வர்த்தகம், எரிசக்தி, தொழில்நுட்பம், வேளாண்மை, மற்றும், மக்கள் நிலையிலான தொடர்புகள் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு உறவுகள் வலுவடைந்து வருவதையும் அவர் சுட்டிக் காட்டினார். முன்னதாக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் கனடா வெளியுறவு அமைச்சரை சந்தித்து பேசினார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-----------------------------------